**கவனிக்க.-** *2021.09.03 ஆந் திகதிய 2244 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II , பகுதி III மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2245 - 2021 සැප්තැම්බර් මස 10 වැනි සිකුරාදා - 2021.09.10

*2245 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 916 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி- வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2021, ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்காணி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


915 - B 082267 - 353 (2021/09)

# காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் அளிப்பு செய்யப்பட்ட காணி அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் இலக்க உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் உயன்வத்தே ஜயசிங்ஹ முதியன்சேலாகே ஸம்பத் சுமன பண்டார ஜயசிங்ஹ ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் இலக்க உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1982.09.30 ஆந் திகதி அளிப்புச் செய்யப்பட்ட மஹ/பிர/1019 ஆம் இலக்கத்தையுடைய அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான பட்டியகேலே குடியிருப்பில் வசிக்கும் மீரா குசேன் அப்துல் மஜீட் என்பவருக்கு அளிக்கப்பட்ட கண்டி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல்டிஓ/ஜீ/146/1151 ஆம் இலக்கத்தின் கீழ் 1984.10.03 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் எவரும் இல்லை என்பதனால் அல்லது சட்ட ரீதியான உரிமையாளர் இருப்பினும் அவர் பின்னுரிமையாளராவதற்கு விருப்பம் இல்லை என்பதனால் பின்னுரிமையாளர் ஒருவர் நியமிப்பதற்கு இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளமையினால் இவ் அளிப்புப்பத்திரத்தினை மேல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் இலக்க உட்பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2021.10.01 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*கண்டி நிர்வாக மாவட்டத்தின் கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் கங்கஹுய வடக்கு கோறளையின் தென்னைகும்புர கிராம அலுவலர் பிரிவின் தென்னைகும்புர எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் அத்தியட்சகரின் மூலம் தயாரிக்கப்பட்டதும் மற்றும் அவர் பொறுப்பில் உள்ள 1 25/22 ஆம் இலக்க வெளிக்களப் பத்திரத்தில் இலக்கம் பி. பி. மஹ 407 கொண்ட வரைபடக் குறிப்பில் இலக்கம் 45 கொண்ட நிலப் பகுதியாகக் காட்டப்பட்டுள்ள, அளவில் 30 பேர்ச் ஆக பாரியளவில் உள்ள கீழே தரப்பட்டுள்ள முறையில் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி பட்டியகேலே குடியிருப்பு -*

*வடக்கு : துண்டு இலக்கம் 44 ;*
*கிழக்கு : துண்டு இலக்கம் 35 ஆம் நுழைவாயில் வீதி மற்றும் 60 ஆம் கால்வாய் ஒதுக்கீடு ;*
*தெற்கு : துண்டு இலக்கம் 46 மற்றும் 60 கால்வாய் ஒதுக்கீடு ;*
*மேற்கு : துண்டு இல. 48 ஆம் பாதை ஒதுக்கீடு மற்றும் துண்டு இல. 46.*

*யூ. ஜே. எம். எஸ். எஸ். பி. ஜயசிங்ஹ,*
*பிரதேச செயலாளர்,*
*கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை.*

*2020, திசெம்பர் 20.*

*09-94/1*

---

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் அளிப்பு செய்யப்பட்ட காணி அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் இலக்க உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் தொழுவ பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) வகுரே கமராளாளாகே யமுனா பிரியதர்ஷனி தயாரத்ன ஆகிய நான், காணி*

*அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1982.09.27 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மஹ/ பிர/ 807 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய ஹேனயலாகே கெதர லமாரிதீ அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல்.டி.ஓ.சீ. 08/ 104 ஆம் இலக்கத்தின் கீழ் 1984.01.17 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடையவர் ஒருவர் இருந்தபோதிலும் அவர், பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2021.10.01 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.*

**அட்டவணை**

*கண்டி நிர்வாக மாவட்டத்தில் உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் கந்துகர பஹல பத்துவ/கோரலேயில் மெகொட கலுகமுவ கிராம அலுவலர் பிரிவில் ஹல்ஓய என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட பி.பி.ஏ. 2117 ஆம் இலக்க நிரல் குறிப்பில் 21 ஆம் இலக்க காணித்துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் 00 ஏக்கர் 03 றூட் 21 பேர்ச் விஸ்தீரணத்தை உடையதுமான, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி- ஹல்ஓய குடியிருப்பு:*

*வடக்கு : குடியிருப்பு வீதி மற்றும் காணித்துண்டு இலக்கம் 20 ;*
*கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 07 ;*
*தெற்கு : காணித்துண்டு இலக்கம் 07 ;*
*மேற்கு : ஹி. பி. 66714.*

*டபிள்யூ. ஜீ. வை. பீ. தயாரத்ன,*
*பிரதேச செயலாளர்,*
*தொழுவ.*

*2021, ஏப்பிறல் 03.*

*09-94/ 2*

---

*இணைப்பு 9*

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் அளிப்பு செய்யப்பட்ட காணி அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் இலக்க உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

*மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் கங்கஇஹல கோரளே பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர் கபில கத்தில லெனரோல் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1992.07.20 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/ கஇகோ/ 125 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய எத்கால குடியிருப்பில் வசிக்கும் மிரிச்சே ரதுபததகே வில்பட் அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் சீ. 8/ 62 ஆம் இலக்கத்தின் கீழ் 2009.06.18 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடையவர் ஒருவர் இருந்தபோதிலும் அவர், பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2021.10.01 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.*

**அட்டவணை**

*கண்டி நிர்வாக மாவட்டத்தில் கங்கஇஹல கோரலே பிரதேச செயலாளர் பிரிவில் கங்கஇஹல கோரலேயின் சிங்ஹபுர கிராம அலுவலர் பிரிவில் தெம்பிலிகல பல்லேகம என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும், மூ. பி. மஹ 2364 ஆம் இலக்க நிரல் குறிப்பில் 32 ஆம் இலக்க காணித்துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் 0.094 ஹெக்டயார் விஸ்தீரணத்தை உடையதுமான, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி- எத்கால குடியிருப்பு:*

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 31 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 33 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 41 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 41 மற்றும் 77.

கே. ஜீ. லெனரோல்,
பிரதேச செயலாளர்,
கங்க இஹல கோரலே.

2020, செத்தெம்பர் 21.

09-94/ 3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.